

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (11.7.2025) வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் ரூ.6 கோடி மதிப்பீட்டில் தங்கசாலை, வள்ளலார்நகர் பேருந்து நிலையம் கட்டுமானப் பணிகள் நடைபெறுவதை முன்னிட்டு, இராயபுரம் மாநகராட்சி மண்டல அலுவலகம் அருகில் தற்காலிக பேருந்து நிலையம் அமைப்பதற்கான இடத்தினை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது மேயர் திருமதி.ஆர்.பிரியா, இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர் டாக்டர் த.பிரபுசங்கர், மண்டலக் குழுத்தலைவர் பி.ஸ்ரீராமுலு, தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி, தலைமைப் பொறியாளர் மகாவிஷ்ணு, எம்.டி.சி. பொது மேலாளர் (இயக்கம்) எஸ்.நெடுஞ்செழியன், மாநகராட்சி மண்டல அலுவலர் சொக்கலிங்கம், செயற்பொறியாளர் லோகேஷ்வர், மாமன்ற உறுப்பினர் திருமதி. வேளாங்கண்ணி, அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

ஒன்றியக் கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ் ஏற்பாட்டில்

# பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் அவசர ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்புரை!

திருவள்ளூர், ஜூலை 12

திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் அவசர ஆலோசனைக் கூட்டம் நாளை (13.07.2025 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 4 மணிக்கு பூந்தமல்லியில் உள்ள ஹோட்டல் ஹைவே ஜெயின் யில் பூந்தமல்லி கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ் ஏற்பாட்டில் நடைபெறுகிறது.

இதில் ஒன்றிய அவைத்தலைவர் அண்ணாமலை தலைமை தாங்கினார் பொதுக்குழு உறுப்பினர் எம். முத்தமிழ்செல்வன், வி.குமார், ஒன்றிய கழக நிர்வாகிகள் ஏ.ஜனார்த்தன், எம்.இளையான், ஏ.ஆர்.பாஸ்கர், எஸ்.புகழேந்தி, சுமதி குமார், வயலை பிரபாகரன், வி.பி.பிரகாஷ், க.பரிமளழகன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளரும் தமிழ்நாடு சிறுபான்மை மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா. மு.நாசர் கலந்துகொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்க உள்ளார்.

இதில் பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினரும் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளருமான ஆ.கிருஷ்ணசாமி உள்பட மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள் எனவே கிளை கழக செயலாளர்கள் அணிகளின் நிர்வாகிகள் கழக இன்னாள் முன்னாள் நிர்வாகிகள் பாக முகவர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்.

பொருள் ஜூலை 20 அன்று கழக இளைஞரணிச் செயலாளரும் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்து கொள்வது குறித்து



திருவள்ளூர் மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி, கே.டி.வி. ஆயில் நிறுவனத்தின் சார்பில் கவரைப்பேட்டை அரசு மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவிகளுக்கு கையேடுகளை முன்னாள் மாவட்ட செயலாளர், தலைமை செயற்குழு உறுப்பினர் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ. கோவிந்தராஜன் வழங்கினார். உடன் கே.ஜி.நமச்சிவாயம், கேடிவி ஆயில் நிறுவனத்தின் நிர்வாகிகள் பாலசுப்பிரமணி, யுவராஜ், மகேந்திரன், மோகனபிரசாத், கே.வி.நாகராஜ், அம்பேத்கர் நடராஜன், மெய்யழகன், செந்தில், அமுல்ராஜ், கஜேந்திரன் எஸ்.எம்.சி தலைவர் மற்றும் நிர்வாகிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.









